**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.06/2025 மற்றும் 07/2025**

IN

**அசல் வழக்கு எண்.213/2016**

1. வீராச்சாமி (இறப்பு)
2. அந்தோணியம்மாள்
3. சூசையம்மாள்
4. செல்லத்துரை
5. சிறியபுஷ்பம்
6. ராஜம்மாள்
7. பாக்கியராஜ்
8. செல்லப்பாண்டி
9. சுந்தர்
10. குருஸ்சம்மாள்
11. மைனர்.விக்னேஷ்
12. மைனர்.யோகேஷ்

(மைனர் 11 மற்றும் 12 மனுதாரர்கள் தங்களது
தாயாரும், அடுத்த சிநேகிதியுமான 10ம் மனுதாரர் மூலம்)

... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. வெள்ளைச்சாமி (இறப்பு)
2. முத்துப்பாண்டி
3. தேவதாஸ்
4. ரத்தினம்
5. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி
   அதன் சுந்தரபாண்டியபுரம்
   கிளை மேலாளார் மூலம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 10.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.ஈஸ்வரி அவர்கள் ஆஜராகியும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:23 +0530

1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ் இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களை குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு வா.சா.1ன் முதல் விசாரணையை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

<u>1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.06/2025 மற்றும் 07/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>

இம்மனுக்களின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கின் 1ம் பிராது தபசில் சொத்தை பொறுத்து 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்வதன் மூலம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 2ம் பிராது தபசில் சொத்தை பொறுத்து பதிவு அடமான ஆவணம் மற்றும் தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்ய உத்தரவிட்டும் 1ம் மனுதாரர் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்திருந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 09.07.2025 அன்று மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டு,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:29 +0530

குறுக்கு விசாரணைக்காக 26.08.2025ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி முதல்விசாரணை அன்று 1ம் மனுதாரர் பெயரில் உள்ள சில ஆவணங்களை தாக்கல் செய்ய இயலாமல் விடுபட்டு போய்விட்டது என்றும், 1ம் மனுதாரர் இறந்துவிட்டதால் மேற்படி ஆவணங்களை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், தற்போது தான் அந்த ஆவணங்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றது என்றும், எனவே வா.சா.1-ஐ மனுதாரர்கள் தரப்பில் ரீ-ஓப்பன் செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பை நிரூபிக்க முடியும் என்றும், எனவே இவ்வழக்கில் விசாரணையின்போது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆதரவுகள் மனுதாரர்களின் கட்சியை நிரூபிக்ககூடிய முக்கியமான ஆதரவுகளாகும் என்றும், மேற்படி ஆதரவுகளை முன்னமே இவ்வழக்கில் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமாக ஏற்பட்ட தவறு என்றும், ஆகையால், இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களை குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு வா.சா.1ன் முதல் விசாரணையை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் இம்மனுக்கள் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இ.ம.எண்.06/2025 மற்றும் 07/2025-ன் எதிருரைகளின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விபரங்களில் 3ம் லக்க ஆவணமானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டதாகும் என்றும், எனவே மேற்கண்ட ஆவணம் உரிய அலுவலரால் வழங்கப்படாத நிலையில், அது குறியீடு செய்யத்தக்க ஆவணம் அல்ல என்றும், ஆவண எண்.5 பற்றி மனுதாரர்கள் தங்களது வழக்குரையில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றும், மேலும் ஆவண எண்.6-ஐ பொறுத்து மனுதாரர்களே இந்நீதிமன்றத்தில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:36 +0530

நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், விசாரணை துவங்கப்பட்ட இவ்வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன், மனுதாரர்கள் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏன் முந்தைய காலகட்டங்களில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறித்து எவ்வித விளக்கங்களையும் குறிப்பிடாமல் Vague ஆக தாக்கல் செய்துள்ள நிலையில் மனுதாரர்களின் மனு ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆதரவுகள் எந்த வகையில் இவ்வழக்கிற்கு அத்தியாவசியமானது என்றும், இவ்வழக்கில் எவ்வகையில் மனுதாரர்களின் கட்சியை ருசு செய்யக்கூடியது என்றும் தெளிவாக தங்களது உறுதிக்கூற்றில் தெரிவிக்கவில்லை என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது 1ம் வாதியால், பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து 03.12.2015ல் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்துள்ள கழுகுமலை சார்பதிவக ஆவண எண்.2760/2015 பதிவு அடமான ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்தும், பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்து 09.12.2015ல் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்துள்ள கழுகுமலை சார்பதிவக ஆவண எண்.2812/2015 தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:43 +0530

செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்தும், பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்து 27.01.2016ல் 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்துள்ள கழுகுமலை சார்பதிவக ஆவண எண்.142/2016 பதிவு அடமான ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது வா.சா.1–ஐ 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யவேண்டி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரர்களால் இ.ம.எண்.07/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் முதல்விசாரணை அன்று 1ம் மனுதாரர் பெயரில் உள்ள சில ஆவணங்களை தாக்கல் செய்ய இயலாமல் விடுபட்டு போய்விட்டது என்றும், 1ம் மனுதாரர் இறந்துவிட்டதால் மேற்படி ஆவணங்களை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், தற்போது தான் அந்த ஆவணங்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றது என்றும், எனவே வா.சா.1–ஐ மனுதாரர்கள் தரப்பில் ரீ–ஓப்பன் செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பை நிரூபிக்க முடியும் என்றும், எனவே இவ்வழக்கில் விசாரணையின்போது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆதரவுகள் மனுதாரர்களின் கட்சியை நிரூபிக்ககூடிய முக்கியமான ஆதரவுகளாகும் என்றும், மேற்படி ஆதரவுகளை முன்னமே இவ்வழக்கில் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:51 +0530

ஏற்பட்டதல்ல என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) ஆனால், மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் மனுதாரர்களால் இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

10) மேலும், இம்மனுக்களின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விபரங்களில் 3ம் லக்க ஆவணமானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டதாகும் என்றும், எனவே மேற்கண்ட ஆவணம் உரிய அலுவலரால் வழங்கப்படாத நிலையில், அது குறியீடு செய்யத்தக்க ஆவணம் அல்ல என்றும், ஆவண எண்.5 பற்றி மனுதாரர்கள் தங்களது வழக்குரையில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றும், மேலும் ஆவண எண்.6–ஐ பொறுத்து மனுதாரர்களே இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், விசாரணை துவங்கப்பட்ட இவ்வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன், மனுதாரர்கள் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏன் முந்தைய காலகட்டங்களில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறித்து எவ்வித விளக்கங்களையும் குறிப்பிடாமல் Vague ஆக தாக்கல் செய்துள்ள நிலையில் மனுதாரர்களின் மனு ஏற்புடையதல்ல என்றும் இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) இருப்பினும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரர்களால் இ.ம.எண்.07/2025 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:31:58 +0530

அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) ஆகையால், அசல் வழக்கானது மறுதிறவு செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.07/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**14) இறுதியாக**

**இ.ம.எண்.06/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 01.12.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 01.12.2025.

**இ.ம.எண்.07/2025**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 01.12.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:32:06 +0530

தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 01.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:32:12 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.13 17:32:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.06/2025 and
I.A.No.07/2025
in
O.S.No.213/2016

உத்தரவு (Draft / Fair)

நாள் : 13.11.2025